தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1971 மார்ச் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. **மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்புகள்.

வினா—விடை நேரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றும் வினா—விடை நேரம் இல்லை.

The Hon. Member, Thiru K. T. K. Thangamani has written me a letter requesting that steps may be taken to have the 'Question Hour' from 1st April 1971. I may inform the House that so far, 6 short Notice Question and 78 Starred Questions have already been admitted and communicated to the concerned departments and answers are awaited. The Question section is in daily contact with the departments to obtain answers as early as possible. At this end all steps are being taken to obtain answers as expeditiously as possible.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

2. கவன ஈர்ப்பு.

பாலப்பநாயக்கன்பட்டியில் திராவிட முன்னேற்றக் கட்சியைச் சார்ந்த சிலர் தாக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியமொன்றை திரு. பெ. மலைச்சாமி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சாவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், **நத்தம் துணை** வட்டம் பாலப்பநாயக்கன்பட்டியில் 17—3—1971-ம் நாள் காலையில் **நிஜலிங்கப்பா** தலைமை காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் **சார்ந்த** ஏழு பேரை பயங்கரமான ஆயுதங்களால் தாக்கிப் படுகாயப்படுத்தி, உயிருக்கு ஊறு விளையும் நிலையை உருவாக்கியுள்ளதால் அங்கு தகுந்த பாதுகாப்பு செய்து தர வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 17—3—1971 அன்று, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாலப்பநாயக்கன்பட்டி என்ற கிராமத்தில் 46 காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லப்படுவோர் கூட்டமாக வந்து, கத்தி, தடி, மற்றும் கற்களால் தாக்கியதில் ஏழு திராவிட முன்னேற்றக் கழக

ஆதரவாளர்கள் காயம் அடைந்தார்கள். இது குறித்து நத்தம் காவல் நிலைய குற்ற எண் 30/71-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு இ.பி.கோ. 147-இ, 148, 323, 324, 336, மற்றும் 337 பிரிவுகளின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து 18—3—1971 அன்று முப்பது நபர்களும், 19—3—1971 அன்று 15 பேர்களும் கைது செய்யப்பட்டு, 19—3—1971 அன்று மாலையிலேயே கோர்ட்டாரால் ஜாமீனில் விடப் பட்டுள்ளனர்.

உயர்தர காவல்துறை அதிகாரிகளும், விசேஷ காவல் படையினரும் பாலப்ப நாயக்கன்பட்டியில் முகாம் செய்துள்ளனர். அவர்களின் நேரடிப் பார்வையில் நிலைமை கட்டுக்கடங்கி இருக்கிறது. தற்போது அந்தக் கிராமத்தில் அமைதி நிலவுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, தாக்குதலை நடத்தியவர்கள் அண்ணன் தம்பிகள், உறவினர்கள். அதைவிடப் பரிதாபகரமான நிகழ்ச்சி நேற்று நடந்திருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்று மாலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கண்டுள்ள பொருள்குறித்து ஏதாவது விவரம் வேண்டுமானால் அதைக் கேள்வி ரூபத்தில் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது அளிக்கப்பட்ட அறிக்கை யிலிருந்து இந்தச் சம்பவம் குறித்து ஏதாவது கேள்வி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாம்.

திரு. பெ. மலைச்சாமி: அதுபோன்ற நிகழ்ச்சிகள் நேற்றுகூட என்னுடைய தொகுதியில் நடந்திருக்கின்றன. தயவு செய்து முதலமைச்சர் அவர்கள், இத்தகைய கொடுமையான நிகழ்ச்சிகளுக்கு முடிவு கட்டுவதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி நிகழ்ச்சி நடந்திருந்தால். விதி 41-இன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக வரக் கூடியதாக இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் சபைக்குத் தரலாம்.

3. அரசினர் மசோதா

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.